RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

DOI: 10.34256/irjt22s633

# சங்க இலக்கியங்களில் நால்வகை வருணத்தார் பண்பாடு

**சி.பு. இந்துஜா** [அ, *]

[அ] தமிழ்த்துறை, சிந்திக் கல்லூரி, பூந்நமல்லி, சென்னை-600077, தமிழ்நாடு, இந்தியா.

# The Four Types of Varunathar Culture in Sangam Literature

**S.P. Induja** [a, *]

[a] Department of Tamil, Sindhi College of Arts & Science, Poonamallee, Chennai-600077, Tamil Nadu, India

* Corresponding Author: spinduja@gmail.com

Received: 19-10-2021
Revised: 14-04-2022
Accepted: 01-05-2022
Published: 30-07-2022

Check for updates

**ABSTRACT**

The Sangam literature clearly captures the way of life and cultural characteristics of the ancient Tamils. It is the Sangam literature that reveals the antiquity and venerability of the Tamil people even today. Literature is composed of beautiful songs that are rich in ideas and imagination. It is through these verses that the backgrounds of the Brahmins, Kings, Vellalas, and Merchants who existed at that time can be understood. The occupations, customs, rituals, etc., of the people who lived in ancient society can be traced back to the Sangam literature. The Tamil language is the classical language of the world's languages. Literature in this language has innumerable details about culture. But in today's environment, culture is only found in the books we read. The purpose of this article is to reveal that the only truth is the idea that everyone, from the common man to the educated, is changing according to the times and the environment.

**Keywords:** Sangam Literature, Rituals, Brahmins, Kings, Vellalas, Merchants

## முன்னுரை

தமிழ் மொழி உலக மொழிகளின் தாயாகத் திகழ்கிறது. இம் மொழியில் உள்ள இலக்கியங்கள் எண்ணற்ற பண்பாட்டுத் **தகவல்களை** கொண்டுள்ளன. அவற்றுள் எட்டுத்தொகை, பத்துப்பாட்டு மூலமாக நால்வகை வருணத்தார் பண்பாட்டுப் பதிவுகளை ஆராய்வதே இவ்வாய்வின் நோக்கமாகும்.பண்பாடு என்பது மாந்தனது அக உணர்வு வளர்ச்சியையும், சீர்மையையும் குறிப்பது ஆகும். தமிழ் பண்பாட்டின் தொன்மையை அறிந்துக் கொள்வதற்கு பெரிதும் துணை புரிபவை இலக்கண நூலாகிய தொல்காப்பியமும் சங்க இலக்கியங்களும் ஆகும்.

## பொதுநலமும் பண்பாடும்

நாவலந் தேசம் எனப்படும் இந்திய நாட்டில் தமிழ்நாடு நல்லதாக சொல்லப்பட்டது.

"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத்

தமிழ் கூறும் நல் உலகத்து"

என்று தொல்காப்பியச் சிறப்புப் பாயிரம் பாடிய பனம்பாரனார் தமிழ்மொழியின் சிறப்பினைக் கூறியுள்ளார் (Subramanian, 2003).

"சிறப்புடை மரபிற் பொருளும் இன்பமும்

அறத்து வழிப்படூஉம் தோற்றம் போல,”

கூறுகிறது (Parimanam, Balasubramaniyam, 2007). தமிழர் அறத்தை எல்லா பேரசுகளுக்கும் முதன்மையாகக் கொண்டிருந்தனர் என அறிய முடிகிறது. மொழித் துறையில் தமிழர் நாகரீகம் அடைந்து இருந்தது போன்று பண்பாடும் அடைந்திருந்தனர்.

பெரியோரிடம் கைநீட்டிப் பேசாமலும், அவர்களைப் பார்த்ததும் அவர்களை விட சிறியவர்கள் மரியாதையோடு எழுந்து நிற்பதும் தமிழர் பணிவுடைமையாகக் கருதப்பட்டது. பொதுவாக சிறியோரை நீ என்றும், வயது ஒத்தவனை நீர் என்றும், உயர்ந்தோனை தாங்கள் என்றும், துறவு மடத்தலைவனை அங்குற்றை என்னும் சொல்லால் சுட்டுவது தமிழர் மரபாகும். சங்கத்தமிழர் தென்புலத்தார் நாளன்று இரப்போருக்கும், ஏழை எளியவருக்கும் விருந்தளித்தனர். வயிற்றுச்சூலி இறந்துவிட்டால் சுமைதாங்கிக் கல் நட்டனர். வேனிற்காலத்தில் வழிப்போக்கருக்குத் தண்ணீர்ப்பந்தலும், மோர்ப்பந்தலும் வைத்து ஆவிற்கு உறிஞ்சு தறி நாட்டியும், விலங்குகளுக்குத் தண்ணீர்த் தொட்டிக் கட்டியும் பலவாறு அறஞ்செய்து வந்தனர் (Balasubramaniyam, 2004).

வீடு கட்டும் பொழுது அயலாரும், ஆண்டியரும் படுத்துறங்கத் தெருத் திண்ணை அமைத்திருந்தனர் .மாடங்களின் உச்சியில் புறாக்கள் தங்குவதற்கு புரைகள் விடப்பட்டன.

இதனை,

“பெருங்கை யானைக் கொடுந்ததொடி படுக்கும்

கருங்கைக் கொல்லன் இரும்பு விசைத்து எறிந்த

கூடத் திண் இசை வெரீஇ மாடத்து

இறைஉறைபுறவின் செங்காற் சேவல்

இன் துயில் இரியும்பொன்துஞ்சு வியல் நகர்”

கூறுகின்றது (Mohan, 2007). இப்பாடலின் மூலம் சங்ககால மக்கள் பிற உயிர்களிடத்தில் அன்பு உடையவர்களாக இருந்தனர் என்பதை அறியமுடிகிறது. இன்றைய சமுதாய மக்களும் இப்பண்பினை போற்றிப் பாதுகாக்கும் பண்பாடு உடையவர்களாக இருக்க வேண்டும் என்பதை உணர முடிகிறது.

## அந்தணாளர் பண்பாடு

அந்தணர்கள் விரிநூல் அந்தணர், புரி நூல் அந்தணர் என்றும் இருவகையாகக் கருதப்பட்டனர்.விரிநூல் அந்தணர் என்போர் விரிவான வேதங்களையும், ஏனைய நூல்களையும் கற்றவர்கள் ஆவர். புரி நூல் அந்தணர் என்போர் அந்தணருக்கு அடையாளமான பூணூலை மட்டும் அணிந்திருப்போர் ஆவர். இவர்கள் யாசகம் செய்வர். இதனை,

“விரிநூல் அந்தணர் விழவு தொடங்க ப்

புரி நூல் அந்தணர் பொலம் கலம் ஏற்ப”

கூறுகின்றது (Subramanian, 2004).

அந்தணர் என்போர் இரு பிறப்பாளர்கள். இரண்டு பெயர்களை உடையவர்கள். இரக்கமுள்ள நெஞ்சம் படைத்தவர்கள். ஒப்பற்ற புகழ் உடையவர்கள் என்று பாராட்டி கூறப்படுவதை சங்க இலக்கியங்கள் வழி அறிய முடிகிறது. இதனை,

"இரு பிறப்பு, இருபெயர், ஈர நெஞ்சத்து,

ஒரு பெயர், அந்தணர் அறன் அமர்ந்தோயே"

விளக்குகிறது (Subramanian, 2004). ஆனால் இன்றும் ஒவ்வொரு மனிதரும் இதே பண்போடுத் திகழ வேண்டும் என்பதைப் பரிபாடல் வாயிலாக அறியமுடிகிறது.

அக்காலப் புலவர்கள் அரசரை அடுத்து அரசியல் தவறுகளை எடுத்துக் காட்டி அவற்றை திருத்தவும், பொதுநலத் திட்டங்களை வகுத்துக் கொடுத்து அவற்றை நிறைவேற்றவும் அறிவுரைக் கூறி வந்தனர். அறிவுடை நம்பியிடம் சென்ற பிசிராந்தையார் அரசன் சிறப்படைய இப்பாடல் வரிகளினைப் பாடினார்.

“காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே

மாநிறைவு இல்லதும் பல்நாட்கு ஆகும்

நூறு செறு ஆயினும், தமித்துப் புக்கு உணினே

வாய் புகுவதனினும் கால் பெரிது கெடுக்கும்

அறிவுடை வேந்தன் நெறிஅறிந்து கொளினே

கோடி யாத்து நாடு, பெரிது நந்தும்

மெல்லியன் கிழவன் ஆகி,வைகலும்

வரிசை அறியாக் கல்லென சுற்றமொடு,

பரிவு தப எடுக்கும் பிண்டம் நச்சின்,

யானை புக்க புலம் போல

தானும் உண்ணான் உலகமும் கெடுமே!”

இப்பாடல் வரிகள் மூலம் பிசிராந்தையார் "அரசே! நெல்லை அறுத்து யானைக்கு உணவு செய்து இட்டால் பலநாளுக்கு உணவாகும். யானையை நெல்வயலில் விட்டால் காலால் மிதித்துச் சிதைப்பது மிகையாகும் (Mohan, 2007). அதுபோல அறிவுடைய அரசானவனே குடிமக்களிடம் முறையாக வரி வாங்கினால் கோடியாக செல்வம் வளரும். நாட்டு மக்களும் விரும்புவர். முறையற்று தன் ஆட்களை ஏவி கருணை இன்றிப் பிடுங்கும் செல்வமானது யானைப் புகுந்த நிலம் போல் ஆகும். தானும் உண்ண மாட்டான். மக்களும் கெடுவார்கள்" என விளக்குகின்றார்.

அந்தணர்க்குரிய அறங்கள் சங்க காலத்தில் அந்தணர்கள் மதுரை மாநகரில் அவர்க்குரிய அறங்களுடன் வாழ்ந்துள்ளனர். இதனை,

“சிறந்த வேதம் விளங்கப் பாடி,

விழுச்சீர் எய்திய ஒழுக்கமொடு புணர்ந்து,

நிலம் அமர் வையத்து ஒரு தாம் ஆகி,

உயர் நிலை உலகம் இவண் நின்று எய்தும்

அறநெறி பிழையா அன்புடை நெஞ்சின்,

பெரியோர் மேஎய், இனிதின் உறையும்

குன்று குயின்ற அன்ன அந்தணர் பள்ளியும்”

அந்தணர்கள் வேதம் ஓதவேண்டும் (Mohan, 2007). அந்தணருக்கான ஒழுக்கங்களைப் பேணி வாழவேண்டும். அறநெறி அந்தணர்கள் வாழ்ந்த இடம் அந்தணர் பள்ளி என்று சங்ககாலத்தில் அழைக்கப்பெற்றுள்ளது. பிறழாது வாழவேண்டும். அன்புடை நெஞ்சத்தோடு இருக்கவேண்டும். உயர்நிலையான வீட்டுலகினை இங்கிருந்தே அடைவதற்கானச் செயல்களை அவர்கள் செய்து ஒழுகவேண்டும் என்ற பொருள்படக் கூறுகின்றது. இன்றையச் சமுதாயச் சூழலில் மனிதன் இறை உணர்வு மிக்கவனாக திகழ்ந்தால் அவனுடைய மனிதநேயப் பண்பு மேம்படும் என்று அறிய முடிகிறது.

## கொற்றவன் பண்பாடு

சங்ககாலத்தில் கொற்றவன் என்பவன் தம்மை நாடி வரும் புலவர்களுக்கும் மற்றவர்களுக்கும் பொன்னையும், பொருளையும் வரையாது கொடுத்து மகிழ்ந்தமை சங்க இலக்கியங்களால் உணரமுடிகிறது. கடையேழு வள்ளல்களை பற்றியும் அவர்கள் பயன் கருதாது செய்த கொடைச் செயல்களையும் சிறுபாணாற்றுப்படை விளக்குகிறது. இதனை,

"கான மஞ்ஞைக்குக் கலிங்கம் நல்கிய

அருந்திறல் அணங்கின் ஆவியர் பெருமகன்

பெருங்கல் நாடன் பேகனும், சுரும்பு உண"

கூறுகின்றது (Mohan, 2007). கொற்றவன் மக்களைப் பேணுவதில் ஓர் தந்தையைப் போன்று விளங்கினான். மக்களுக்கு நேரக்கூடிய பலவகை துன்பமாகிய வெயிலில் இருந்து குடிகளைக் காத்து இன்பமாய் நிழலைத் தருபவனாக செயல்பட்டான். எனவே குடை அரச சின்னங்களில் ஒன்றாகக் கருதப்பட்டது.

கொற்றவன் குடி மக்களிடத்தில் மிகுந்த அன்பு கொண்டிருந்தான். செங்கோல் நெறியோடு ஆட்சிசெய்த கொற்றவன் ஏதாவது ஒரு காரணத்தால் உயிர் இழக்க நேரிட்டாலும் பொய் பேசுவது இல்லை என்பதையும், பண்டைய இலக்கியங்களின் வழியாக அறியமுடிகிறது.

பழங்காலத்தில் கொற்றவன் தம்மை நாட்டை ஆளும் தலைவர் என்று கருதாது நாட்டை காக்கும் தந்தை என்றே கருதினான். இதனை,

"ஞாயிறு சுமந்த கோடு திரள் கொண்மூ

மாக விசும்பின் நடுவு நின் தாங்கு"

கூறுகின்றது (Parimanam, Balasubramaniyam, 2007).

அக்காலத்தில் தலையாலங்கானத்ததில் பகைவர் எழுவரும் ஒன்றாகக்கூடி போரிட வந்தனர் என்பதை அறிந்த நெடுஞ்செழியன் நான் இளையவன் என்று நினைத்து என் வலிமையை அறியாமல் இவர்கள் என்னிடம் போரிட வந்திருக்கிறார்கள் .நான் அவர்களை இப்போரில் அழிப்பேன். அங்ஙனம் நான் அவர்களை அழிக்காவிட்டால் என் குடிமக்கள் என்னை கொடுங்கோலன் என்று தூற்றட்டும். புலவர்கள் என்னைப்பாடாது என் நாட்டை விட்டு நீங்கட்டும். இரவலர்க்கு கொடுக்காத கொடிய வறுமையும் என்னை வந்து சேரட்டும் என்று வஞ்சினம் கூறுகிறான். இதனை,

"உறு துப்பு அஞ்சாது, உடல் சினம் செருக்கி"

கூறுகின்றது (Parimanam, Balasubramaniyam, 2007). மக்களை கவனிப்பதில் எந்த இடையூறு ஏற்பட்டாலும் அதைப்பற்றி பொருட்படுத்தாது ஆட்சி செய்தவன் கொற்றவன் ஆவான்.

## வணிகர் பண்பாடு

ஒரு நாட்டின் சிறந்த தொழில்களாக உழவுத் தொழிலையும், வாணிக தொழிலையும் மக்கள் கருதினர். வணிகர்கள் பொருள் ஈட்டுவது என்ற குறிக்கோள் மட்டுமின்றி உலக நன்மைக்காகவே வாணிபம் செய்ததாகவும் முன்னோர் கருதினர். பல இடங்களில் விளையக்கூடிய பொருள்களை ஓரிடத்தில் சேர்த்து அவை கிடைக்காத வேறு இடங்களுக்கு அனுப்பினர் .மக்கள் அனைவரும் வறுமை இல்லாமல் வாழ வேண்டும் என்ற உயரிய பண்பு உடையவர்களாகவும் வணிகர் விளங்கினார்.

வணிகம் சிறந்த புகார் நகரத்திலே சிறந்த வணிகர்கள் பலர் வாழ்ந்திருந்தனர். இதனை,

"நெடு நுகத்துப் பகல் போல

நடுவு நின்ற நல்நெஞ்சினோர்,

வடுஅஞ்சி வாய்மொழிந்து,

தமவும் பிறவும் ஒப்ப நாடி,

கொள்வதூஉம் மிகை கொளாது,கொடுப்பதூ உம் குறை கொடாது,

பல் பண்டம் பகர்ந்து வீசும்

தொல் கொண்டி துவன்று இருக்கை”

என்று கருத்தாழமிக்க வரிகளில் பாடியிருக்கிறார் (Ilaya Bharathi, 2012).

வணிகர்கள், நீண்ட நுகத்தடியில் தைத்திருக்கும் நடு ஆணி போல் நடுவு நிலைமையோடு வாழும் நல் நெஞ்சத்தை உடையவர்கள். பழிக்கு அஞ்சி உண்மையே பேசுவார்கள்.தம்முடைய பொருளையும், பிறருடைய பொருளையும் ஒரு தன்மையாகவே எண்ணுபவர்கள். பொருளை வாங்குவோரிடம் அளவுக்கு மேல் அதிகமாக வாங்கமாட்டார்கள். தாங்கள் கொடுக்கும் பண்டத்தையும் குறைத்துக் கொடுக்காமல் வணிகம் செய்பவர்கள் என பட்டினப்பாலை கூறுவதிலிருந்து அக்கால வணிகர்களின் வணிக மேலாண்மையை அறிய முடிகின்றது. இக்கால வணிகர்களும் நம் முன்னோர் செய்த வாணிப முறையை பின்பற்றி நடந்தால் மக்களும் மகிழ்ச்சியாக வாழலாம் என்பதை உருத்திரங்கண்ணனார் வாயிலாக அறிய முடிகிறது.

அக்காலத்தில் வாணிபம் செய்யும் வணிகர்கள் நல்ல தரமானப் பொருட்களை வாங்கி விற்பனை செய்தனர் .அதனால் அப்பொருள்களை பெற்றுக் கொள்பவர்களின் உள்ளமும் மகிழ்ச்சி அடையும் 'என்ற குறிக்கோளுடன் செயல்பட்டனர். இதனை,

“அறநெறி பிழையாது ஆற்றின் ஒழுகி

குறும்பல் குழுவின் குன்று கண்டன்ன,

பருந்து இருந்து உகக்கும் பல்மாண் நல்இல்,

பல்வேறு பண்டமோடு ஊண் மலிந்து கவனி,

மலையவும், நிலத்தவும், நீரவும், பிறவும்,

பல்வேறு திருமணி, முத்தமொடு, பொன்கொண்டு,

சிறந்த தேளத்துப் பண்ணியம் பகர்நரும்”

கூறுகின்றது (Mohan, 2007). இக்கால வணிகர்கள் எவ்வாறு திகழ வேண்டும் என்பதற்கு சங்க கால வணிகர்கள் ஒரு முக்கிய சான்றாக செயல்பட்டனர். அங்காடிகளில் பலவகையான பொருட்களை வாணிபம் செய்பவர்கள் வைத்திருந்தனர். மக்கள் தாங்கள் வாங்க வந்த பொருட்களை எளிதாகக் கண்டு கொள்வதற்கு வசதியாக வணிகர்கள் கொடிகள் கட்டி வியாபாரம் செய்தனர் ஒவ்வொரு பொருளுக்கும் வெவ்வேறு வகையான கொடிகளை பயன்படுத்தினர். இதனை,

“கள்ளின் களி நவில் கொடியொடு, நன் பல"

கூறுகின்றது (Mohan, 2007). இன்று வாணிபம் செய்பவர்கள் கொடிகள் பயன்படுத்தும் மரபு இல்லை. ஆனால் விளம்பரப் பலகைகள் பயன்படுத்துவதற்கு காரணம் நம் முன்னோரின் வழி முறைகளாகும்.

## வேளாளர் பண்பாடு

அக்காலத்தில் உழவுத் தொழில் சிறப்பாக நடைபெற்றதால் அங்குள்ள மக்கள் பசியை அறியாதவர்களாக இருந்தனர். அக்கால மக்களின் இல்லங்களில் பழைய நெல்கள் எப்பொழுதும் இருந்து கொண்டே இருந்தது. இதனை,

"தொல்பசி அறியாத் துளங்கா இருக்கை

மல்லல் பேர்ஊர் மடியின், மடியா"

கூறுகின்றது. எனவே இரப்போருக்கு இல்லை என்று சொல்வதில்லை. பொருட்களை வாரி வாரி வழங்கினர் (Mohan, 2007).

சங்க இலக்கியங்கள் கூறும் நால்வகை வருணத்தில் பண்பாட்டுக் கூறுகள் பற்றிய சில செய்திகள் தொகுக்கப்பட்டுள்ளன. அவர்கள் கடைபிடித்து வந்தநெறிமுறைகளை நாமும் பின்பற்றி வாழ்தலும் வாழ்ந்து சிறத்தலும் வேண்டும்.

## முடிவுரை

பண்டையத் தமிழரின் வாழ்க்கை முறைகளையும், பண்பாட்டு சிறப்புகளையும், தெளிவாக சங்க இலக்கியங்கள் இயம்புகின்றன. பண்டையச் சமூகத்தில் வாழ்ந்த மக்களின் தொழில் முறைகள், பழக்க வழக்கங்கள், சடங்குமுறைகள், முதலான பண்பாடுகள் சங்க இலக்கியங்கள் வழி அறிய முடிகிறது. ஆனால் இக்காலச் சூழல்களில் பண்பாடு என்பது நாம் வாசிக்கும் நூல்களில் மட்டுமே காணப்படுகிறது. பாமரர் முதல் படித்தவர் வரை அனைவரும் காலத்திற்கு ஏற்பவும் சூழலுக்கு ஏற்பவும் மாறிக் கொண்டிருக்கின்றனர் என்ற கருத்து மட்டுமே உண்மை என்பதை வெளிப்படுத்துவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## References

Ilaya Bharathi, (2012) Pattinapalai, Generic publication, Chennai, India.

Mohan, Ra., (2007) Perumpanatrupadai Paathupattu, New Century Book House, Chennai, India.

Parimanam, A.M., Balasubramaniyam, K.V., (2007) Purananuru, New Century Book House, Chennai, India.

Subramanian, S, V., (2003) Tholkaapiyam Thelivurai, Manivasagar Pathippagam, Chennai, India.

Subramanian, S.V., (2004) paripadal Moolam Uraiyum, New Century Book House, Chennai, India.

Balasubramanian, K.V., (2004) Pathupattu, New Century Book House, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License